# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:28** **தேதி:11.03.2015**

## சில மத்திய சங்க செய்திகளும் CMDஉடன் சந்திப்பும்

அன்பார்ந்த தோழர்களே,

**PLI கமிட்டியின் கூட்டம்** 12.03.2015 அன்று நடைபெற உள்ளது. கடந்த கூட்டத்தில் நிர்வாகம் PLI பார்முலாவின் அடிப்படை தொடர்பான முன்மொழிவுகளை கொண்டு வந்திருந்தது. அது தொடர்பான ஒரு சில கேள்விகளை ஊழியர் தரப்பில் கேட்கப்பட்டது. அதற்கான பதில்களுடன் நிர்வாக தரப்பு அந்தக் கூட்டத்திற்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**இந்தியா 2013-14ஆம் ஆண்டுடில் 74,000 கோடி ரூபாய்களுக்கு தொலை தொடர்பு கருவிகள் இறக்குமதி:-** இந்திய நாடு 2013-14 ஆம் ஆண்டில் 74,116 கோடி ரூபாய் அளவிற்கு மொபைல் தொலைபேசிகள் உள்ளிட்ட தொலைதொடர்பு கருவிகளை வெளி நாடுகளில் இருந்து இறக்குமதி செய்துள்ளது. அது 2012-13 ஆண்டில் 61,539 கோடி ரூபாய்களாக இருந்தது. 2014ஆம் ஆண்டில் மட்டும் 22.5 கோடி மொபைல் தொலைபேசிகல் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. 2014-15 ஆம் ஆண்டின் முதல் 7 மாதங்களில் மட்டும், இந்தியா 52,310 கோடி ரூபாய் மதிப்புள்ள தொலை தொடர்பு கருவிகளை இறக்குமதி செய்துள்ளது. தொலை தொடர்பு துறையில் 100 சதவிகித அந்நிய நேரடி முதலீட்டை இந்திய நாடு அனுமதித்துள்ளது. இதனால் இந்திய நாட்டில் உள்நாட்டு உற்பத்தி பெருகும் என இந்திய அரசாங்கம் கூறியது. ஆனால் உண்மையில் உள்நாட்டு உற்பத்தி குறைகிறது. உதாரணமாக 2011ஆம் ஆண்டில் இந்தியாவில் 15.5 கோடி மொபைல் தொலைபேசி கருவிகள் இந்திய நாட்டில் தயாரிக்கப்பட்டது. அது 2014ஆம் ஆண்டில் 5.8 கோடியாக குறைந்துள்ளது. இதுதான் நரேந்திர மோடியின் "இந்திய நாட்டில் தயாரிப்போம்" என்ற கோஷத்தின் உண்மை முகவிலாசம்.

**சொத்து மதிப்பில் இந்தியாவின் 10ஆவது பெரிய நிறுவனம் BSNL:-** மத்திய அமைச்சர் திரு அருன் ஜேட்லி 10.03.2015 அன்று பாராளுமன்றத்தில் அளித்த ஒரு பதிலின் அடிப்படையில், 2013-14ஆம் ஆண்டில் வரவு செலவு அறிக்கை தாக்கல் செய்து இந்தியாவில் செயல்படும் 4,15,886 நிறுவனங்களில், அதன் சொத்து மதிப்பின் அடிப்படையில் ரிலையன்ஸ் இந்தியா லிட் நிறுவனம் தான் மிகப்பெரிய நிறுவனம். இந்த பட்டியலில் 10ஆவது மிகப்பெரிய நிறுவனம் BSNL என்பது நமக்கு பெருமையான விஷயம்.

**CMDஉடன் சந்திப்பு:-** அன்று BSNL ஊழியர் சங்கத்தின் பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு, தலைவர் தோழர் பல்பீர்சிங் மற்றும் துணை பொதுசெயலாளர் தோழர் ஸ்வபன் சக்கரவர்த்தி ஆகியோர் CMD திரு அனுபம் ஸ்ரீவஸ்தவா அவர்களை சந்தித்து கீழ்கண்ட பிரச்சனைகளை விவாதித்தனர்:-

1) **தேசியக் கவுன்சில் மற்றும் தலமட்ட கவுன்சில்களுக்கு சங்க உறுப்பினர் அல்லாதவர்களை நியமிப்பது:-** நமது தலைவர்கள் கேரள உயர்நீதிமன்ற வழிகாட்டுதலை CMDயின் பார்வைக்கு கொண்டு வந்து தேவையான வழிகாட்டுதலை BSNLன் SR கிளைக்கு கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டனர். உயர்நீதிமன்ற வழிகாட்டுதலின் நகல் ஒன்றையும் வழங்கினர். தேவையான நடவடிக்கைகளை எடுக்க CMD ஏற்றுக் கொண்டார்.

2) **BSNLன் மனித வளத் திட்டம்:-** டிலாய்ட்டி கமிட்டி பரிந்துரைகளின் அடிப்படையில், BSNLன் மனித வள திட்டம் தொடர்பான நிர்வாகக் குழுவின் முடிவுகள் தொடர்பாக BSNL ஊழியர் சங்கம்தனது நிலையினை தெஇரிவ்த்துள்ளது. இது தொடர்பாக தொழிற்சங்கத்தோடு விவாதிக்க வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டனர். சிறிய SSAக்களை ஏரியாக்களாக இணைக்கும் பிரச்சனையில் ஊழியர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும். இது தொடர்பாக நிர்வாகம் எடுக்க உள்ள நடவடிக்கைகளைப் தெளிவாக கூற வேண்டும் என்றும் கோரினார்கள். இந்த இரண்டு கோரிக்கைகளையும் CMD ஏற்றுக் கொண்டார்.

3) **நீண்ட நாட்களாக தேங்கிக் கிடக்கும் ஊழியர் பிரச்சனைகள்:-** JAC போராட்டம் நடத்தியுள்ள நீண்ட நாட்களாக தேங்கிக் கிடக்கும் ஊழியர் பிரச்சனைகளை CMDயின் பார்வைக்கு தலைவர்கள் கொண்டு வந்தனர். இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண JAC நிர்வாகிகளுடன் CMD ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் முன்மொழிந்தனர். இது போன்ற ஒரு கூட்டத்தை விரைவில் நடத்த CMD ஏற்றுக் கொண்டார்.

4) **ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை கார்ப்பரேட் அலுவலகம் கையாள்வது:-** தற்போது ஒப்பந்த ஊழியர்களின் பிரச்சனைகளை நிர்வாக(ADMN) பிரிவில் கையாண்டு வருகின்றனர். BSNL தலைமையக உத்தரவு அமுல் படுத்தப்படுவது தொடர்பாக கண்காணிக்க எந்த ஒரு முறையும் இந்தப் பிரிவில் இல்லை. மேலும் தொழிலாளர் நல அமுலாக்கம்(LABOUR ENFORCEMENT) பிரிவு ESTABLISHMENT பிரிவின் கட்டுப்பாட்டில் வருகிறது. இந்த பகுதியில் தான் ஒப்பந்த ஊழியர் பிரச்சனை கையாள வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் ஏற்கனவே கேட்டுள்ளது. இது மீண்டும் எழுப்பப்பட்டு இன்று CMD அதனை கவனிப்பதாக உறுதி அளித்துள்ளார்.

5) **BSNL-MTNL இணைப்பு கூடாது:-** BSNLன் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதால் BSNL-MTNL இணைப்பை BSNL நிர்வாகம் எதிர்க்க வேண்டும் என தலைவர்கள் CMDஐ வற்புறுத்தினர். இது தொடர்பான பொறுத்தமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என CMD தெரிவித்தார்.

வாழ்த்துக்களுடன்,

**தோழமையுள்ள,**

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**